
www.tamilarangam.net

# தமிழகம்

## தன்னுரிமையா? தனி நாடா? மாநில சுயாட்சியா?




இராசேந்திரசோழன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழகம்,

தன்னுரிமையா — தனிநாடா
மாநிலசுயாட்சியா.

(C) இராசேந்திர சோழன்

முதற்பதிப்பு : ஆகஸ்டு 1996

விலை : ரு. 5-00

அச்சிட்டோர் :
கவிக்குயில் அச்சகம்
47. நல்ல தம்பி தெரு.
திருவல்லிக்கேணி,
தொலைபேசி : 836107

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒரு நிமிடம்...

சமீப சில ஆண்டுகளாக, தமிழக அரசியலில் தன்னுரிமை' எனும் சொல் பலத்த விவாதங்களையும் சர்ச்சைகளையும் கிளப்பி வந்திருக்கிறது.

தன்னுரிமை என்பது ஒரு தேசத்தின் பிறப்புரிமை எனவே தமிழ்த் தேசத்திற்கு தன்னுரிமை கோரும் உரிமை உண்டு என தன்னுரிமைக்கு ஆதரவான குரல்கள் ஒரு புறம்.

தன்னுரிமை என்பதே பிரிவினை வாதம் என இதற்கு எதிர்ப்புக்குரல் கொடுத்து, ஒப்பாரி வைத்து புலம்பித் தீர்க்கும், 'பாரத மாதா பஜனை மடங்கள்' மறுபுறம்.

இதற்கிடையே தன்னுரிமையோடு தனிநாடு கோரிக்கையையும், மாநில சுயாட்சிக் கோரிக்கையையும் போட்டுக் குழப்பி தன்னுரிமையின் சாரத்தையே அடையாளம் காண விடாமல், காட்ட விடாமல் அழிக்கும் 'அறிவுஜீவத்தனமான' முயற்சிகள் வேறு.

இந்நிலையில் தன்னுரிமைக்கும் தனிநாட்டிற்கும் மாநில சுயாட்சிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் எனக் கருதி அந்த அவசியத்தின் வெளிப்பாடாக எழுந்ததே இச்சிறுநூல்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூடுமான வரை எல்லோருக்கும் விளங்கும் வகையில் எளிமையான முறையில் வினா - விடை வடிவில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

நூலைப் படிப்பவர்கள் தங்களுக்கு எழும் எந்தக் கருத்துக்களையும், சோம்பல், சுணக்கம் படாமல், அல்லது எழுதுவோம் என்று நினைத்து தள்ளி தள்ளிப் போட்டு மறந்து விடாமல் நினைவாக, ஒரு நாலுவரி இம்முகவரிக்கு எழுதிப் போட அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நூலின் கைப்பிரதியைப் படித்து தேவையான திருத்தங்கள், மாற்றங்கள், ஆலோசனைகள் நல்கிய அன்புத் தோழர்கள் பெ. மணியரசன், கி. வெங்கட்ராமன் ஆகியோருக்கும், நூலை நல்ல முறையில் அச்சாக்கித் தந்த கவிக்குயில் அச்சகத்தார்க்கும், பணியாளர்களுக்கும் நன்றி.

மயிலம்
2 - 8 - 96

தோழமையுடன்
**இராசேந்திர சோழன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தன்னுரிமையா...? தனிநாடா...?

1. நாம் எங்கிருந்து இந்த விவாதத்தைத் துவங்கலாம்?

1. ஒரு பொதுவான மொழி, 2. பொதுவான வாழ்க்கைப் பகுதி. 3. பொதுவான பொருளாதார வாழ்வு, 4. பொதுவான கலாச்சாரத்தில் வெளிப்படும் உளவியல் உருவாக்கம் ஆகிய இவற்றின் அடிப்படையில் வரலாற்றுப் போக்கில் உருவாகிப் பரிணமித்த ஒரு நிலையான மக்கள் சமூகத்தைத் தேசம் (Nation) எனவும்,

ஒரு ஆட்சிப் பரப்பின் புவியியல் வரம்பெல்லையை அதற்குட்பட்ட பகுதியை நாடு (Country) எனவும் புரிந்து கொண்டதன் அடிப்படையில் இந்த விவாதத்தைத் துவங்கலாம்.

அதோடு இந்தியா ஒரு தேசமல்ல. பல்வேறு தேசங்களைக் கொண்ட ஒரு துணைக் கண்டம், இத்துணைக் கண்டத்துள் சிறைப்பட்டுக் கிடக்கும் பல்வேறு தேசங்களுள் தமிழ்த் தேசமும் ஒன்று என்கிற புரிதலும் இந்த விவாதத்திற்கு அடிப்படை.

2. தன்னுரிமை என்றால் என்ன?

ஒரு தேசம் தன் அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு வாழ்வைத் தானே தீர்மானம் செய்து கொள்ளும் உரிமையை,

www.tamilarangam.net



அதாவது அந்த தேசத்தின் பரப்பெல்லை, குடியுரிமை மற்றும் சமூகத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் தானே தீர்மானம் செய்து கொள்ளும் உரிமையை,

சுருக்கமான ஒரு தேசம் தன் இறையாண்மையைத் (Sovereignity) தானே பெற்றிருப்பதை சுய நிர்ணய உரிமை (Self determination) தன்னுரிமை என்கிறோம்.

இதையேதான் லெனின்,

''தேசிய இனங்களின் தன்னுரிமை என்பதற்கு அரசியல் தன்னுரிமை, அரசியல் சுயேச்சைத் தன்மை, ஒரு தேசிய அரசு அமைதல் என்கிற பொருள்தான் உண்டு. வேறு பொருள் இருக்க முடியாது'' என்றார்.

எனவே தன்னுரிமை என்பதன் பொருள், சாரம் இறையாண்மை, அதைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமையே ஆகும்.

**3. தன்னுரிமை ஒரு தேசத்தின் பிறப்புரிமையா?**

ஆம். இப்படிப்பட்ட உரிமைகள் ஒரு தேசத்திற்கு யாராலும் வழங்கப்படுவதில்லை. அதே போல இவ்வுரிமைகள் யாராலும் மறுக்கப்படவும் கூடாது. என்பதே இதன் பொருள்.

இதனால்தான் தன்னுரிமையை ஒரு தேசத்தின் பிறப்புரிமை என்கிறார்கள். இதில் வேறு எந்த தேசமோ வேறு எந்த அந்நிய சக்திகளோ தலையீடு செய்யவோ குறுக்கீடு செய்யவோ எந்த வித உரிமையும் கிடையாது.

இந்த அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் சாசனம் பிரிவு3-ம் மற்றும் ஜெனிவா மாநாட்டு அடிப்படையிலான சர்வதேச சட்டங்கள் உலகம் முழுவதுமுள்ள தேசங்களின் தன்னுரிமையை அங்கீகரிக்கிறது.

www.tamilarangam.net



இதன் சாரம் எந்த ஒரு தேசமும் பிற ஒரு தேசத்தை அடக்கவோ ஒடுக்கவோ கூடாது. அதேபோல எந்த ஒரு தேசமும் பிற ஒரு தேசத்திற்கு அடிமைப்பட்டு கிடக்கவும் கூடாது.

இவ்விரண்டுமே ஒரு தேசத்தின் தன்னுரிமையை மீறுவது ஆகும். இந்த வகையிலேயே தேசங்களின் தன்னுரிமை, பிறப்புரிமை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

4. தன்னுரிமைக்கும் தனி நாட்டிற்கும் என்ன வேறுபாடு?

முதலில் தன்னுரிமையும் தனி நாடும் ஒன்றுக் கொன்று எதிரானது என்று கருதுவதோ அல்லது இரண்டும் ஒன்றே என்று கருதுவதோ இரண்டுமே தவறானது.

காரணம் தன்னுரிமை என்பது சாரத்தைக் குறிக்கும். தனி நாடு என்பது அது நிலவுவதை அதாவது தன்னுரிமை நிலவும் வடிவத்தைக் குறிக்கும்.

தன்னுரிமை என்பது இறையாண்மை என்று பார்த்தோம். அந்த இறையாண்மை எந்த வடிவத்திலும் நிலவலாம். அதாவது அது தனி நாடு என்கிற வடிவத்திலும் நிலவலாம். கூட்டாட்சி என்கிற வடிவத்திலும் நிலவலாம்.

எனவே தன்னுரிமைக்கும் தனி நாட்டிற்குமான உறவை சாரம், வடிவம் என்கிற அர்த்தத்திலேயே புரிந்து கொள்ளவேண்டும்.

அல்லாமல் தனி நாடு என்பது மேலானது, கூடுதலானது. தன்னுரிமை என்பது தாழ்வானது, குறைவானது என்கிற வகையில் தவறாக அர்த்தம் செய்து கொள்ளக் கூடாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



5. தனி நாடாக நிலவுவதொன்றே தன்னுரிமையை அர்த்தப் படுத்தாது என்பது எப்படி?

ஆம். எடுத்துக் காட்டாக பிரான்சு, இத்தாலி, நார்வே, பின்லாந்து ஜப்பான் முதலானவைகள் தனி நாடுகளாக இருக்கின்றன. அதே வேளை இவை தங்களுக்கான தன்னுரிமையை, இறையாண்மையையும் கொண்டிருக்கின்றன.

ஆனால் வியட்நாம் தனிநாடக இருந்தபோதிலும் ஒரு காலத்தில் அமெரிக்க பிரஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. கொரியாவும் அப்படியே. ஆப்பிரிக்கக் கண்டத்தில் பல நாடுகள் தனியாக இருந்த போதிலும் இங்கிலாந்து பிரான்சு நாட்டிற்கு அடிமையாகக் கிடந்தன.

எனவே தனி நாடு என்பது ஒரு தனி புவியியல் பரப்பை அர்த்தப்படுத்துமே யல்லாது அது தனியாக இருப்பதாலேயே தன்னுரிமை பெற்றிருப்பதாக அர்த்தமாகி விடாது. அது தன்னுரிமை பெற்றதாகவும் இருக்கலாம். பெறாததாகவும் இருக்கலாம்.

6. இதன்படி கூட்டாட்சியில் உள்ள ஒரு தேசமும் தன்னுரிமை பெற்றதாக இருக்க முடியும் என்று பொருள் ஆகாதா?

நிச்சயம், தன்னுரிமை என்பது இறையாண்மை என்று ஆகிவிட்ட பிறகு ஒரு தேசத்திற்கு இறையாண்மை இருக்கிறதா என்றுதான் பார்க்க வேண்டுமேயல்லாது அது கூட்டாட்சியில் உள்ளது என்பதற்காக அதற்கு தன்னுரிமை இல்லை, இறையாண்மை இல்லை என்கிற முடிவுக்கு வந்து விடக்கூடாது.

கூட்டாட்சியில் இருந்து கொண்டே அது தன்னுரிமையைப் பெற முடியும். வாலாற்றில் இதற்கான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னுதாரணமாக சோவியத் ஒன்றியம் இருந்தது. இவ்வொன்றியத்தில் இடம் பெற்றிருந்த தேசங்கள் தற்போது தனித் தனியாக பிரிந்துள்ளன.

இப்படித் தனியாகப் பிரிந்த நாடுகள் சில தங்கள் இறையாண்மைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் மீண்டும் ஒன்று சேர்ந்து' சுதந்தர நாடுகளின் பொதுநல அமைப்பு' (Commonwealth of Independent States) என்னும் அமைப்பை உருவாக்கியுள்ளது.

கூட்டாட்சியில் இருந்து கொண்டே ஒரு தேசம் தன் இறையாண்மையைப் பெற முடியும் என்பதற்கு இவை களை எடுத்துக் காட்டுகளாகக் கொள்ளலாம்.

7. சிலர் தனி நாடு கேட்பதுதான் 'புரட்சி' தன்னுரிமை கேட்பதெல்லாம் 'புரட்டு' என்கிறார்களே?

இது அறியாமையில் அல்லது அகங்காரத்தில் வெளிப் படுகிற கூற்று.

தனி நாடு கேட்பவர்களை நீங்கள் ஏன் தனி நாடு கேட்கிறீர்கள், எந்த அடிப்படையில் கேட்கிறீர்கள் என்று ஒரு வினா எழுப்பினால் விவரமறிந்தவர்கள் சொல்வார்கள். எங்களுக்கு இறையாண்மை இல்லை அதனால்தான் தனி நாடு கேட்கிறோம் என்று.

இறையாண்மை என்பதே தன்னுரிமையின் சாரம் என்பதன் அடிப்படையில் எங்களுக்கு தன்னுரிமை இல்லை ஆகவே தனி நாடு கேட்கிறோம் என்பதே இதன் பொருளாக இருக்க முடியும்.

எனவே தனி நாடு கேட்கிறவர்களும் தன்னுரிமையைத் தான் கோருகிறார்கள். ஆனால் அத் தன்னுரிமையை தனி நாடு என்கிற வடிவில் கோருகிறார்கள் என்பதாகவே இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதைவிட்டு தனி நாடு கேட்பதுதான் புரட்சி தன்னுரிமை கேட்பதெல்லாம் புரட்டு என்பதில் எந்த நியாயமும் இருக்க முடியாது.

8. அப்படியானால் தனி நாடு கேட்பதற்கும் தன்னுரிமை தான் அடிப்படை என்கிறீர்களா?

ஆம்- தேசம் என்கிற வரையறுப்பிலிருந்தும், தேசங்களுக்கான தன்னுரிமை என்கிற வரையறுப்பிலிருந்தும் தானே தனி நாடு கேட்க முடியும்.

அல்லாமல் தனி நாடு கேட்பவர்கள் அவர்கள் பாட்டுக்கு அவர்கள் விருப்பத்திற்கு தனி நாடு கேட்க முடியுமா...எடுத்துக் காட்டாக தமிழ் நாட்டின் தென் பகுதியை மட்டுமோ, தென் தமிழ் நாட்டின் சில பகுதிகளையும் கேரளாவின் சில பகுதிகளையும் சேர்த்தோ அல்லது வட தமிழ் நாட்டின் சில பகுதிகளையும், வடதமிழ் நாட்டின் சிலபகுதிகளையும் ஆந்திராவின் சில பகுதிகளையும் சேர்த்தோ அல்லது வேறு மாதிரியாகவோ யாராவது தனி நாடு கேட்க முடியுமா?

எனவே தனி நாடு கேட்பதற்கும் ஒரு அடிப்படையுண்டு. அந்த அடிப்படைதான் தேசம் பற்றிய வரையறுப்பும் அவ்வரையறுப்பின் அடிப்படையினால் ஆன தன்னுரிமையும்.

ஆகவே தனி நாடு கேட்பவர்களும் தன்னுரிமைதான் கேட்கிறார்களே தவிர இதைத் தாண்டி வேறு எதையும் கேட்க வில்லை. ஆனால் இத் தன்னுரிமையை அவர்கள் தனி நாடு வடிவில் கோருகிறார்கள் அவ்வளவே.

9. தன்னுரிமை என்று பூடகமாய்க் கேட்காமல் தனி நாடு என்று வெளிப்படையாய்க் கேட்பது தானே மக்களுக்குப் புரியும்?

www.tamilarangam.net



இது, நாம் இது வரை நடந்து வந்த பாதையே இன்னும் தெளிவடையவில்லை என்பதையே காட்டுகிறது.

தனி நாடு கேட்பவர்களும் தன்னுரிமைதான் கேட்கிறார்கள் என்று ஆகிவிட்ட பிறகு தன்னுரிமை கேட்பவர்களுக்கும் தனி நாடு கேட்பவர்களுக்கும் சாரத்தில் ஒன்றும் வேறுபாடு இல்லை. வடிவத்தில் மட்டுமே வேறுபாடு இருக்கிறது என்பது தானே பொருள்.

அதாவது தனி நாடு கேட்பவர்கள் தன்னுரிமை நிலவுவதற்கான ஒரு வடிவத்தை மட்டுமே முன் வைக்கிறார்கள், தன்னுரிமை கோருபவர்கள் இரண்டு வடிவத்தையுமே அதாவது தனி நாடு,கூட்டாட்சி ஆகிய இரண்டு வடிவத்தையுமே முன் வைக்கிறார்கள் என்று பொருள்.

எனவே தன்னுரிமைக் கோரிக்கைக்கும் தனி நாடு கோரிக்கைக்கும் இக்கோட்பாட்டு அடிப்படைதான் வேறுபாடே தவிர, இதில் பூடகம் வெளிப்படை என்றெல்லாம் பார்ப்பதற்கு ஏதுமில்லை.

அப்படியே ஒரு வாதத்திற்கு மக்களை துணைக்கு அழைத்துக் கொள்வதானாலும் மக்களுக்குத் தனி நாடு புரியும் போது, தன்னுரிமை புரியாது என்பது அபத்தமானது.

10. இதன்படி பார்த்தால் போராட்ட களத்தில் சாரத்தை மட்டுமே முன்னிறுத்தினால் போதும் வடிவத்தை முன்னிறுத்த வேண்டாம் என்கிறீர்களா?

அப்படியுமல்ல. எந்த சாரமும் வடிவம் அல்லாமல் நிலவமுடியாது. ஏதாவதொரு வடிவத்தோடேயே அது நிலவும்.

ஆகவே சாரத்தைக் கோரும்போதே அதற்குரிய வடிவத்தோடேதான் அது கோரப்படுகிறது. ஆனால் அது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரண்டு வகையான வடிவத்திலும் நிலவ முடியும் என்னும் போது அது குறிப்பிட்ட இந்த வடிவத்தில்தான் நிலவ வேண்டும் அல்லது இந்த வடிவத்தில் இருந்தால்தான் ஏற்றுக் கொள்ளுவோம் என்று முன் நிபந்தனை விதிக்க வேண்டியதில்லை என்கிறோம்.

அப்படி நிபந்தனை விதிப்பது சாரத்தை அடைவதற்கான போராட்டத்தின் முனைப்பை குறைக்கும். பெரும்பாலும் அப்படித்தான் நடை முறையிலும் இருந்து வருகிறது.

சுருக்கமாகச் சொல்வதானால் இப்படி முன் நிபந்தனை விதிப்பது, தனி நாடு என்கிற வடிவில் வந்தால் தான் தன்னுரிமையை ஏற்போம் இல்லாவிட்டால் ஏற்க மாட்டோம் என்பதாகவே முடியும்.

இது தன்னுரிமைக்கான போராட்டத்திற்கு உத்வேகத்தைத் தராது.

11. நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள் ஆனால் சிலர் தனி நாடு என்று கேட்பதுதான் போராட்டத்திற்கு உத்வேகத்தைத் தரும் என்கிறார்கள்...?

மீண்டும் இது வடிவம் பற்றிய பிரச்சனைக்கேதான் இட்டுச் செல்கிறது.

தன்னுரிமை என்று கேட்பதுதான் சரியாக இருக்கும் என்பதன் பொருள், கோட்பாட்டு ரீதியில் அதுதான் சரியானது என்பதோடு, சாரத்தை முன் வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். மக்களுக்கும் அது பற்றி அறிவூட்டவும், செயலுக்குத் தூண்டவும் வாய்ப்பாகவும் இருக்கும் என்கிற அர்த்தத்தில் தானே தவிர வேறெதுவுமில்லை.

தனி நாடு என்று கேட்பதாகவே வைத்துக் கொள்வோம். எதற்காக தனிநாடு என்று விளக்காமல் அதைக்

www.tamilarangam.net



கேட்க முடியுமா, எதற்காக என்று விளக்காமல் மக்களைத் தான் அணி திரட்ட முடியுமா......

ஆக எப்படியானாலும் தன்னுரிமையை விளக்கத்தான் போகிறோம், அப்படி விளக்கும்போது எதை விளக்கு கிறோமோ அதையே கேட்டு விட்டுப் போவதை விட்டு, அது தனி நாடாகத்தான் இருக்கவேண்டும் என்று முன் நிபந்தனை விதிக்க வேண்டியதில்லை என்கிறோம்.

12. இப்படி முன் நிபந்தனை விதிப்பது தவறு என்கிறீர்களா?

தேவையில்லை என்கிறோம்.முன் எதிர்பார்ப்பு இருக்க கலாம். ஆனால் இதற்கு முன் நிபந்தனை கூடாது.

காரணம் தன்னுரிமைக்காகப் போராடும் ஒரு தேசம் தனி நாடாக அமையுமா அல்லது கூட்டாட்சியாக அமையுமா என்பதையெல்லாம் தீர்மானிக்கக் கூடியது தனிமனித விருப்புக்களோ அல்லது அமைப்பின் விருப்பு வெறுப்புக்களோ அல்லது வரலாற்றின் புறச்சூழல்களே அதைத் தீர்மானிக்கின்றன.

ஆகவே அது தனி நாடாகவும் அமையலாம், கூட்டாட்சி யாகவும் அமையலாம். இந்த இரண்டின் சாத்தியக் கூறையும் உள்ளடக்கிய ஒரு முழக்கம் இருக்கும்போது தனிநாடு என்கிற முழக்கத்தை ஏன் வைக்கவேண்டும் என்பதுதான்.

ஒரு தேசத்தின் தன்னுரிமைக்காகப் போராடும் ஒரு இயக்கம், அதுவும் சமூக அறிவியல் கோட்பாடுகளைத் தன் போராட்டத்தின் வழிகாட்டும் நெறியாகக் கொண்டிருப்ப பதாகக் கூறிக் கொள்ளும் ஒரு இயக்கம் இப்படிப்பட்ட சாத்தியக் கூறுகளைப் பற்றிக் கவலைப்படாமலோ அல்லது அது பற்றித் தெரியாமலோ இருக்க முடியாது. கூடாது.

www.tamilarangam.net



இப்புரிதல் இல்லாமல் தன்னுரிமைக்கு முன் நிபந்தனை விதிப்பது வரலாற்றுப் பூர்வமாகவும் சரி, கோட்பாட்டு ரீதியிலும் சரி சரியல்ல.

13. தன்னுரிமை என்பது தனிநாடாய்ப் போகும் வாய்ப்பை அங்கீகரிக்கிறதா?

நிச்சயமாக. தன்னுரிமை என்பதே பிரிந்து போகும் உரிமையையும் உள்ளடக்கியது தான். பிரிந்து போகும் உரிமையேயில்லாத தன்னுரிமை என்பது எதுவும் கிடையாது. என்றாலும் இது வெளிப்படையாகவே தெரிய வேண்டும் என்பதற்காகவே மிகத் தெளிவாக பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமை என்று சொல்லப்படுகிறது.

எனவே தன்னுரிமை கேட்டால் தனிநாடாகவே பிரிந்து போக முடியாதோ கூட்டாட்சியிலேயே கட்டுண்டு கிடக்க வேண்டுமோ என்றெல்லாம் கவலைப் பட்டுக் கொண்டு கிடக்க வேண்டியதில்லை.

நாம் தனி நாடாகவும் இருக்கலாம். இல்லை கூட்டாட்சியிலும் இருக்கலாம். கூட்டாட்சியில் நமக்குச் சமத்துவம் இல்லை. சுதந்திரம் இல்லை என்றால் பிரிந்து போவதானாலும் போகலாம். இது அவ்வப்போது நிலவும் சூழ்நிலைமைப் பொறுத்தது. அதற்கிசைய தீர்மானிக்கப் படுவது.

ஆகவே அப்போதைய சூழலைக் குறித்து தீர்மானிக்க வேண்டியதை இப்போதே தீர்மானித்து முரண்பாடுகளுக்கு ஆளாகாமல், கண்முன்னே காணும் யதார்த்தத்திற்குப் பொருத்தமாக நாம் எதைப் பெற விரும்புகிறோமோ அதையே முன் வைத்து முழக்கமிடுவதும் போராடுவதுமே பொருத்தமாக இருக்கும்.

www.tamilarangam.net



14. தனி நாடு கேட்பது தான் 'வீரம்' தன்னுரிமை கேட்பது 'கோழைத்தனம்' என்கிறார்களே?

இதற்கெல்லாம் விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. பிரச்சனையை கோபாடு அடிப்படையில் தான் விவாதிக்க முடியுமே தவிர வீரம் கோழை அடிப்படையில் அல்ல.

வீரம் கோழை என்று தீர்மானிப்பதும் வெறும் முழக்கமல்ல. போராட்ட முறை அர்ப்பணிப்பு தியாகம் முதலான செயல் முறைகள். எனவே வெறும் மந்திர உச்சாடனம்போல் முழங்கப்பட்டு வரும் முழக்கம் எது, பருண்மையான செயல் திட்டங்களை முன்வைத்து போராடி வரும் முழக்கம் எது, என்பதை வைத்துதான் இதைத் தீர்மானிக்க முடியுமே தவிர வெறும் வார்த்தைகளை வைத்து அல்ல.

மிக எளிமையான உதாரணம் சொல்வதனால். மிளகாயின் சாரமான காரம் வேண்டும் என்கிறது ஒரு முழக்கம். இப்படி காரத்தை வேண்டும் முழக்கம் அது மிளகாய் வடிவிலும் இருக்கலாம். அல்லது தூள் வடிவிலும் இருக்கலாம் என்கிறது. தேவைப்படும் சாரம் காரமே என்கிறது.

அதெல்லாம் இல்லை காரம் மிளகாய் வடிவில்தான் இருக்க வேண்டும். அப்படி இருக்க வேண்டும் என்று கேட்பது தான் வீரம், என்று இன்னொரு வாதம் வந்தால் எப்படியிருக்குமோ அதைப் போன்றது தான் இது.

இரண்டின் சாரமான காரத்தைக் கேட்டவன் மிளகாயையும் சேர்த்துத் தானே கேட்டிருக்கிறான். அடக்கு முறை தண்டனை என்று வந்தால் இருவருக்கும் ஒரே மாதிரித் தானே வரும்.

அதனால் இதெல்லாம் ஒரு வாதமாகாது.

www.tamilarangam.net



15. தனிநாடு கேட்பவர்களை தன்னுரிமையின் ஆதர வாளர்களாகக் கொள்ளலாமா?

தாராளமாக. ஆனால் தனிநாடு கேட்பவர்களின் நோக்கம் அடிப்படை தன்னுரிமை என்றால் மட்டுமே நாம் அவர்களை ஆதரவாளர்களாகத் கொள்ள முடியும் தன்னுரிமையற்ற அடிப்படையில் தனிநாடு என்றால் எதற்கு என்ற கேள்வி எழுகிறது.

தன்னுரிமை கேட்பவர்களையும் தனி நாடு கேட்பவர் களையும் ஒன்றிணைப்பது இறையாண்மையே. அந்த அடிப்படையில் தனிநாடு கோருபவர்களுக்கு தன்னுரிமை யாளர்களும், தன்னுரிமை கேட்பவர்களுக்கு தனிநாடு கோரிக்கையாளர்களும் ஒருவருக்கொருவர் ஆதரவாளர் களே. ஒரு சாரதிதைக் கோருபவர்கள் என்ற வகையில் கூட்டு நடவடிக்கைகளுக்கும்கூட பொருத்தமானவர்களே.

ஆனால் இவர்கள் கூட்டு சேர்ந்து செயல்படுவது என்பதும், கூட்டு நடவடிக்கைகளுக்குத் திட்டமிடுவது என்பதும் அவரவர்கள் முன் வைக்கும் செயல் திட்டத்தில் ஏற்படும் கருத்தொருமிப்பைப் பொறுத்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தன்னுரிமையா? மாநில சுயாட்சியா?

1. மாநில சுயாட்சி என்றால் என்ன?

ஆங்கிலத்தில் (State Autonomy) எனப்படுவது தமிழில் மாநில சுயாட்சி என அழைக்கப்படுகிறது. மாநில சுயாட்சி என்பதற்கு இது தான் மாநில சுயாட்சி என்பதான (அதாவது இதுதான் தன்னுரிமை என்று தன்னுரிமைக்குச் சொல்கிறோமே அதைப் போல) எந்தவித விஞ்ஞான பூர்வ வரையறையும் கிடையாது.

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் (More Powers to States) என்கிற கோரிக்கை பரவலாக எங்கும் எழுந்துள்ளது.

இந்த கூடுதல் அதிகாரம் எந்த அளவுக்கு வழங்கப் படுகிறதோ அந்த அளவுக்கு அது மாநில சுயாட்சி.

இந்த அதிகாரம் 45 விழுக்காடு இருந்தாலும் மாநில சுயாட்சிதான், 65 விழுக்காடு, இருந்தாலும் மாநில சுயாட்சிதான், 85 விழுக்காடு இருந்தாலும் மாநில சுயாட்சிதான்,

எனவே மாநில சுயாட்சிக்கு என்று ஏதும் திட்டவட்ட மான வரையறைகள் வைத்து இதுதான் மாநில சுயாட்சி என்று சொல்ல முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



2. மாநில சுயாட்சிதான் தற்போது தன்னுரிமை என்கிற பெயரில் கேட்கப் படுகிறது என்று சிலர் சொல்லுகிறார்களே...?

தவறு. இப்படிச் சொல்கிறவர்களுக்கு மாநில சுயாட்சி யும் தெரியவில்லை, தன்னுரிமையும் தெரியவில்லை, என்றே பொருள்.

தன்னுரிமை என்பது இறையாண்மை, பிரிந்து போகும் உரிமை என்று பார்த்தோம். இவ்விரண்டும் தன்னுரிமையின் இரண்டு கண்கள் போன்றவை. இவ் விரண்டும் இல்லாத தன்னுரிமை இல்லை.

ஆனால் மாநில சுயாட்சியில் இறையாண்மைக்கும் இடமில்லை பிரிந்து போகும் பேச்சுக்கும் இடமில்லை. இவ்விரண்டிற்கும் இடமில்லாத மாநில சுயாட்சியை தன்னுரிமையோடு எப்படி ஒப்பிட முடியும்.

இரண்டும் அடிப்படையிலேயே வேறு வேறு. இரண்டும் ஒன்றே என்பது அறியாமை அல்லது ஏமாற்று வேலை.

3. மாநில சுயாட்சியில் இறையாண்மை பிரிந்து போகும் உரிமை இரண்டும் இல்லை என்று எதை வைத்து சொல்கிறீர்கள்.

மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்தும் தி.மு.க. வின் தலைவர்களில் ஒருவரும், முரசொலியின் ஆசிரியரும், தற்போதைய டெல்லி அமைச்சருமான திரு மாறன் 1974-ல் எழுதிய மாநில சுயாட்சி என்கிற நூல் தான் மாநில சுயாட்சி பற்றிய கழகத்தின் கொள்கை விளக்க நூல் என்று கொள்வோமானால்,

அந்நூலில் திரு மாறன் ஒரு இடத்தில் கூட தன்னுரிமை பற்றிக் குறிப்பிடவில்லை. தன்னுரிமை என்கிற சொல் இல்லை என்று நாம் குறைப்பட்டுக் கொள்வதாக அர்த்தம்

www.tamilarangam.net



இல்லை. செய்துகொள்ளவும் தேவையில்லை. ஆனால், தன்னுரிமையை அர்த்தப்படுத்தும் "சுயநிர்ணய உரிமை" (Self determination) என்கிற வார்த்தையோ அல்லது அதை அர்த்தப்படுத்தும் வேறு ஒரு சொல்லோ கருத் தாக்கமோ நூலில் எங்கும் வெளிப்படவில்லை.

அதாவது இறையாண்மை பற்றியோ பிரிந்து போகும் உரிமை பற்றியோ திரு மாறன் எங்குமே குறிப்பிட வில்லை.

4. ஒருவேளை கவனக்குறைவாகவும் கூட அப்படி நேர்ந் திருக்கலாம் அல்லவா...?

நிச்சயமாக இது கவனக்குறைவாக நேர்ந்ததல்ல. தெரிந்தே உணர்ந்தே வேண்டுமென்றேதான் அதைத் தவிர்த்திருக்கிறார்கள்.

அந்நூலுக்கு எழுதிய முன்னுரையில் திரு மாறனே குறிப்பிடுகிறார்.

"இந்தி ஆதிக்க ஒழிப்பு"—"தாய் மொழி, தமிழ் இன, தமிழ் மரபின் மேம்பாடு" "தமிழ் நாட்டின் உரிமைகள்" அதன் நியாயமான பங்கு சுரண்டல் ஒழிப்பு இதுபோன்ற இலட்சியங்களை அடைவதற்கு பிரிவினையை ஒரு மார்க்கமாக தி.மு.க. கொண்டிருந்தது.

"பிரிவினையை முற்றிலும் ஒருமித்த முடிவாகக் கை விட்டபிறகு அந்த லட்சியங்களை—அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட முறையில் இந்திய ஒற்றுமைக்குச் சிறிதும் குந்தகம் ஏற்படாத வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தி அடைவதற்கு தி.மு.க. முன்னர் ஏற்றுக் கொண்ட மார்க்கம்தான் மாநில சுயாட்சி."

இந்த ஒப்புதல் வாக்கு மூலம், இருக்கும் கொஞ்ச நஞ்ச சந்தேகத்தையும் தெளிவு படுத்திவிடும்.

www.tamilarangam.net



5. அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட முறையில் அரசியல் சட்டத்தை திருத்தி என்றால், என்ன பொருள்?

நியாயமாக இது திரு மாறனைக் கேட்க வேண்டிய கேள்வி. என்றாலும் நாம் இப்படி விளங்கிக் கொள்ள லாம்.

இந்திய அரசமைப்புச் சட்டம் இந்தியாவை "பாரத்" என்றும் இந்தியாவிலுள்ள தேசங்களை மாநிலம் என்றும் சொல்கிறது.

இதை திரு மாறன் ஏற்றுக் கொள்கிறார். இதற்கு உட்பட்டு அரசியல் சட்டத்திருத்தம் கொண்டு வந்து மாநிலங்கள் கூடுதல் அதிகாரங்கள் பெற வேண்டும் என்கிறார்.

அப்படிக் கொண்டு வரப்படும் திருத்தங்களுக்கும் கூட "இந்திய ஒற்றுமைக்குச் சிறிதும் குந்தகம் ஏற்படாத வகையில்" என்று முன் நிபந்தனையும் விதித்திருக்கிறார்.

திரு. மாறன் ஏதோ ஒன்றும் தெரியாதவரல்ல. அவர் இது பற்றி தெளிவாகவே தெரிந்திருக்கிறார். அவர் தன் நிலைபாட்டையும் தெளிவாக வைத்திருக்கிறார்.

6. இதெல்லாம் திரு. மாறனின் வரிகளுக்கு நீங்களாகத் தரும் வியாக்கானமா அல்லது திரு மாறனே அப்படி எழுதியிருக்கிறாரா?

நாமாக எந்த வியாக்கியானமும் தரவில்லை. அவர் அந்நூலில் பல்வேறு இடங்களில் எழுதியிருக்கும் கருத்துக் களைத் தொகுத்து ஆய்ந்ததன் அடிப்படையில் இக் கருத்துக்களைச் சொல்கிறோம்.

இந்தியாவில் பல தேசிய இனங்கள் இருப்பதாகச் சொல்லும் திரு மாறன் எந்த இடத்திலும் 'தேசிய இனம்.

www.tamilarangam.net



'தேசம்' குறித்து ஒரு வரையறையைச் சொல்ல வில்லை தமிழகம் ஒரு தேசம் என்றும் நிறுவவில்லை.

இப்படி தேசம் என்று நிறுவினால் அல்லவா தேசத்தின் இறையாண்மை குறித்து தன்னுரிமை குறித்து பேச முடியும்.

அதாவது திரு மாறனின் மாநில சுயாட்சி நூலில் இறையாண்மையும் இல்லை தன்னுரிமையும் இல்லை என்பதோடு தமிழ்த் தேசமும் இல்லை. இந்திய தேசம் தான் இருக்கிறது.

7. அப்படியானால் மாநில சுயாட்சி தமிழ்த் தேசியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்கிறீர்களா?

ஆம். தமிழ்த் தேசியத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் ஓரளவேனும் அது என்ன என்பதை அவர் வரையறை செய்திருப்பார். ஆனால் அப்படிப்பட்ட வரையறையை அவர் நூலில் எந்த இடத்திலும் செய்யவில்லை.

அவரைப் பொறுத்த வரைக்கும் தேசிய இனம் என்பது ஒரு குழு உணர்ச்சி கோஷ்டி மனப்பான்மை, (பக்கம் 445) அவ்வளவுதான்.

இந்தக் குழு உணர்ச்சிக்கும் கோஷ்டி மனப்பான்மைக்கும் ஆதாரமாயிருப்பது மொழியுணர்வு. இதன்படி பார்த்தால் தமிழகத் தமிழர், ஈழத் தமிழர், மலேசியத் தமிழர், சிங்கப்பூர்த் தமிழர், எல்லோரும் இவருக்கு ஒரே தேசிய இனம்.

இப்படி ஒரு தேசியத்தை சமூக அறிவியல் நோக்குள்ள எவரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

மொழியுணர்ச்சியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் குழு உணர்ச்சி வேறு. தேசிய இன உணர்ச்சி என்பது வேறு.

www.tamilarangam.net



8. இதன்படி மாநில சுயாட்சி இந்திய தேசியத்தை ஏற்றுக் கொள்வதாகாதா?

திரு மாறனின் நூல்படி பார்த்தால் 'மாநில சுயாட்சி' இந்திய தேசியத்தை தாராளமாய் ஏற்றுக் கொள்கிறது. அதற்காக கசிந்தும் உருகுகிறது.

திரு மாறனே சொல்கிறார் :

"இந்தியா என்பது ஒரு தேசம். ஒரு நாடு. ஆனால் இந்தியன் என்கிற ஒரு தேசிய இனம் இன்னும் உருவாக வில்லை. அதை எப்படியும் உருவாக்க வேண்டும் என்பது வேறு விஷயம். அதுதான் நமது ஆசையும். ஆனால் இப்போது இதுவரை அது இன்னும் உருவாகவில்லை".

(பக். 458)

இதன்படி இந்திய தேசிய இனம் என்பதை உருவாக்க மாறன் ஆசைப்படுகிறார் என்பது தெளிவு.

இந்திய தேசிய இனம் உருவானால் தமிழ்த் தேசிய இனம் என்பது எங்கிருந்து இருக்க முடியும். எல்லாத் தேசிய இனங்களில் அழிவிலிருந்துதான் இந்திய தேசியம் உருவாக முடியும்.

இப்படி தேசிய இனங்களின் அடையாளங்களை அழிப்பதுதான் மாநில சுயாட்சி போலும்.

9. இது எதிர்மறையாகவே அடுக்கிக் கொண்டு போவது போல் தோன்றுகிறது. திரு மாறன் மாநில சுயாட்சி பற்றி அந்நூலில் என்னதான் கூறுகிறார்.

மாநில சுயாட்சி பற்றி அவர் கூறுவதாவது :

1. இப்போதைய அரசியல் அமைப்பு முழுமையான கூட்டாட்சி அன்று.

2. இப்போது மாநிலங்களுக்கு சுயாட்சி சட்டப்படிக் கான உரிமைகள் தரப்படவில்லை,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



3. மாநிலங்கள் தங்கள் அதிகாரத்திற்கு உட்பட்டவை களில் கூட செயல்படுவதற்கு முடிவதில்லை.

"இம்மூன்று குறைகளும் நீக்கப்பட்ட, மாநில சுயாட்சி அடிப்படையில் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்கிறோம் நாம்..." (பக். 436-37.)

ஆக திரு. மாறன் கோரும் சுயாட்சியில் இம்மூன்று குறைகள் நீக்கப்பட்டால் போதும்.

10. இதைத் தாண்டி வேறு எதுவுமே அவர் மாநில சுயாட்சி பற்றி குறிப்பிடவில்லையா?

குறிப்பிடுகிறார். இந்தியாவில் பாராளுமன்ற சன நாயகம் என்னும் நூலில் திரு கே.வி. ராவ் என்பார் குறிப் பிடுவதாகச் சுட்டிக்காட்டி சில பகுதிகளை அவர் மேற் கோள் காட்டுகிறார். அம்மேற்கோள்கள் கூறுவதாவது:

"ஒரு குறிப்பிட்ட தேர்தல் அறிக்கையின் செயல் திட்டங்களின் மீது மாநில சட்ட சபைக்குப் பெரும் பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு அரசியல் கட்சி அந்தத் தேர்தல் அறிக்கையில் கண்டுள்ள செயல் திட்டங் களை மத்திய அரசு நேரடியாகவோ மறைமுகமாகவோ தடுக்காத விதத்தில் செயல்படுத்தி வெற்றியடைவதற்கு அந்த அரசியல் கட்சிக்கு உள்ள உரிமையையும் தடை ஏதுமில்லாத தன்மையும் தான் மாநில சுயாட்சி என்பதன் பொருள்"

மேலோட்டமாகப் பார்த்ததால இது மாநிலங்களுக்கு முழு அதிகாரம் அளிக்கக் கோருவதுபோல் தோன்றினாலும் மாநிலம். மாநிலம் தான். அதற்குத் தேசியத் தகுதி' இடையாது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

www.tamilarangam.net



11. மாநிலங்களுக்கு தேசியத் தகுதி வழங்கி விட்டால் மாநில சுயாட்சியை தன்னுரிமைக்கு நிகராகக் கொள்ளலாமா?

முடியாது. அப்படி வழங்கினாலும் அதற்கு 'தேசிய சுயாட்சி' என்று தான் பெயரே ஒழிய ''தன்னுரிமை'' என்று கொள்ள முடியாது.

காரணம் அப்படியே மாநிலங்களுக்கு தேசியத் தகுதி கொடுத்து சுயாட்சி வழங்குவதாக ஒரு வாதத்திற்கு ஒப்புக் கொண்டாலும் நாம் ஏற்கனவே பார்த்தபடி இறையாண்மையும் பிரிந்து போகும் உரிமையும் இல்லாதவரை அதற்கு என்ன தான் பெயரிட்டாலும் அது தன்னுரிமையாகாது. தன்னுரிமைக்கு நிகரும் ஆகாது.

ஆனால் திரு கே.வி. ராவ் அவர்களை மேற்கோள் காட்டும் மாறனின் மாநில சுயாட்சி திரு. ராவ் அவர்கள் கோருவதைக்கூட கோரவில்லை என்பது தெளிவு.

ஒரு அரசியல் கட்சி தன் மாநிலத்தின் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்றோ தன் மாநிலம் பிரிந்து போகும் உரிமையைப் பெற்றிருக்க வேண்டும் என்றோ தன் தேர்தல் அறிக்கையில் கொள்கையை முன் வைத்து பெரும்பான்மை வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தால் அதை நிறைவேற்றும் உரிமை திரு ராவ் கோரும் மாநில சுயாட்சி யில் இருக்கவேண்டும்.

ஆனால் திரு மாறன் கோரும் மாநில சுயாட்சியில் தேர்தல் அறிக்கையில் அப்படிப்பட்ட ஒரு கொள்கை களை முன் வைப்பதே தவறு. இந்திய ஒற்றுமைக்கு குந்தகம்.

www.tamilarangam.net



**12. மாநில சுயாட்சிக்கு திரு. மாறனின் நூலை மட்டுமே நீங்கள் ஏன் ஆதாரமாகக் கொள்ள வேண்டும்...?**

இன்றைக்கும் மாநில சுயாட்சிக் கோரிக்கைகளுக்கு முழு உரிமை கொண்டாடி அதைத் தங்கள் இயக்கத்தின் கண்டு பிடிப்பு போலவோ, அல்லது தங்களது முழு முதலான கோரிக்கை போலவோ, அவ்வப்போது முன் வைத்து பேசி வரும் இயக்கம் தி.மு.க.

அதே போல, தன்னுரிமை என்பது தாங்கள் ஏற்கனவே கேட்ட மாநில சுயாட்சிதான் என்று சொல்லி வருபவர் களும் பெருமளவில் தி. மு. க. வினர், அதன் பாரம் பர்யத்தில் வந்தவர்கள் தான்.

எனவேதான், எழுத்து வடிவில் முன் வைக்கப்பட்டுள்ள அந்நூலையே 'மாநில சுயாட்சி'க்கான தி.மு.க.வின் அதிகார பூர்வமான கொள்கை விளக்க நூல் எனக் கொண்டு நாம் பதிலிறுக்க வேண்டியதாகிறது.

**13. தி. மு. க. செயற்குழுத் தீர்மானத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம் என்கிறார்களே?**

அவர்கள் தீர்மானத்தில் சொல்லியிருப்பது இதுதான்:

1. மத்திய அரசிடம் தேசப் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், மாநிலம் விட்டு மாநிலம் நடைபெறும் செய்தித் தொடர்புகள் கரன்சி ஆகிய நான்கு அதிகாரங்கள் மட்டுமே போதுமானது. மற்ற அதிகாரங்களும் எஞ்சிய அதிகாரங்களும் மாநிலம் வசம் "ஒப்படைக்கலாம்".

2. பொதுப்பட்டியல் மிகக்குறைந்த ஆனால் தவிர்க்கப்படவே முடியாத அதிகாரங்கள் கொண்டதாக இருக்க வேண்டும். (பக்கம் 543)

www.tamilarangam.net



முதற் பத்தியில் கூறப்பட்ட நான்கு அதிகாரங்கள் போக எஞ்சிய அதிகாரங்கள் என்ற பிறகு பட்டியலுக்கே அங்கு இடமில்லை. பட்டியல் இருந்தால் அல்லவா மாநிலப்பட்டியல் ஒன்றியப் பட்டியல் பொதுப்பட்டியல் என்று வருவதற்கு.

இதுதான் திமுக கோரும் மாநில சுயாட்சி. மாநிலங்கள் வசம் "ஒப்படைக்கப்பட வேண்டும்" என்று கோருவதற்குக்கூடத் தயக்கப்படும் சுயாட்சி. இதைப் போய் தன்னுரிமை என்று எப்படிச் சொல்ல முடியும்.

14. கூடுலாக எவ்வளவு அதிகாரங்கள் கொடுத்தாலும் அது தன்னுரிமை ஆகாது என்கிறீர்களா?

ஆம். ஒற்றையாட்சித் தன்மை கொண்ட அரசுகள் கூட நிர்வாகக் காரணங்களுக்காக அதிகாரத்தைப் பரவலாக்கலாம். கூடுதல் அதிகாரங்கள் தரலாம். இதையெல்லாம் வைத்து அதைத் தன்னுரிமையோடு போட்டு குழப்பிக் கொள்ளும் மயக்கத்திற்கு ஆளாகி விடக்கூடாது. ஆட்பட்டு விடக்கூடாது.

கேள்வி எந்தக் கோணத்தில் வந்தாலும் அதில் தேசம் வரையறை செய்யப்பட்டிருக்கிறதா அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதா அந்த அடிப்படையில் அதற்கு இறையாண்மை கோரப்பட்டிருக்கிறதா பிரிந்து போகும் உரிமை ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

இதுவெல்லாம் நிறைவு செய்யப்படாமல், இதுவெல்லாம் ஏற்றுக் கொள்ளப்படாமல் அதற்கு எவ்வளவு தான் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் அது மாநில சுயாட்சிதானே தவிர தன்னுரிமையாகாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



15. சில நாடுகளில் மாநிலங்களுக்கு தனி அரசமைப்புச் சட்டம் கொடி, தேசிய கீதம் முதலான உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவே. அதை என்னவென்று அழைப்பது?

ஒற்றையாட்சி அமைப்பில் கூட அதிகாரங்கள் பிரித்துத் தரப்படலாம், பரவலாக்கப்படலாம். என்கிற அடிப்படையில் சில நாடுகளில் மாநிலங்களுக்கு தனி அரசமைப்புச் சட்டம், தனிக்கொடி, தனி தேசிய கீதம் இவைகள் இருப்பது உண்மைதான். சில மாநிலங்களுக்கு குடியுரிமை அதிகாரம்கூட வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால் என்ன வழங்கினாலும் எவ்வளவு வழங்கினாலும் அதற்குப் பெயர் மாநில சுயாட்சிதான்.

அம்மாநிலத்திற்கு அதைத் தேசிய இனமாக அங்கீகரித்த இறையாண்மையும், பிரிந்து போகும் உரிமையும் வழங்கப்படாத வரை, அது தன்னுரிமை ஆகவே ஆகாது.

மேற்கண்ட உரிமைகள் வழங்கப்படுவதெல்லாம் நாம் ஏற்கெனவே பார்த்த மாநில சுயாட்சியின் அளவு வித்தியாசங்களே தவிர, மாநில சுயாட்சிக்கும், தன்னுரிமைக்குமான பண்பு வித்தியாசங்கள் அல்ல.

எனவே, இதையெல்லாம் வைத்து அது தன்னுரிமையை அர்த்தப்படுத்துவதாகக் கொள்ள முடியாது.

16. அப்படியானால் மாநில சுயாட்சி என்பதை நாம் எந்த வரையறைகளுக்கு உட்படுத்திப் புரிந்து கொள்வது?

இதற்கு துவக்கத்திலேயே பதில் சொல்லியாகி விட்டது. மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் என்பதற்கோ மாநில சுயாட்சி என்பதற்கோ எந்த விதமான திட்டவட்டமான வரையறைகளும் இல்லை என்று.

www.tamilarangam.net



எது கிடைக்கிறதோ அப்படிக் கிடைப்பதை வைத்து சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல வசதிக்குகந்த அளவில் வளைத்து நிமிர்த்திப் பேசுவதற்கேற்ற ஒரு சீர்திருத்த வாதக் கருத்தாக்கமே மாநில சுயாட்சி.

இது என்னவென்று வரையறை செய்து கொண்டிருப்பதோ, அதன் மூலம் இச்சக்திகளைக் குறை கூறிக் கொண்டிருப்பதோ, அல்லது இச்சக்திகள் குறித்து குறை மதிப்பீடு செய்வதோ நமது நோக்கமல்ல.

நமது நோக்கமெல்லாம் மாநில சுயாட்சிதான் தன்னுரிமை என்கிற தவறான புரிதலை தெளிவு படுத்த வேண்டும். தன்னுரிமையை அதன் சாரத்தைப் புரியச் செய்ய வேண்டும் என்பதே.

17. மாநில சுயாட்சி ஒரு சீர்திருத்தக் கருத்தாக்கம் என்றால் தன்னுரிமைதான் புரட்சிகரக் கருத்தாக்கம் என்கிறீர்களா?

ஆம். ஏதோ தன்னுரிமைக் கோரிக்கைக்கு வக்காலத்து வாங்க வேண்டும் அதற்குப் புகழாரம் சூட்ட வேண்டும் என்பதற்காக போடுகிற ஆம் இல்லை இது.

உண்மையிலேயே கோட்பாட்டு அடிப்படையைக் கொண்ட, விஞ்ஞான பூர்வமான வரையரைக்குட்பட்ட துல்லியமான ஒரு அரசியல் சொல்லாக்கம் இது.

மாநிலம், அதற்கு கூடுதல் அதிகாரம் என்று யாரையும் பார்த்து இறைஞ்சாமல் தேசம் அதற்குரிய அங்கீகாரம் பிறப்புரிமை இறையாண்மை என்கிற அடிப்படையில் அதிகாரத்தைத் தானே எடுத்துக் கொள்வது. அடிப்படையிலேயே மாற்றத்தைக் கோருவது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதனாலேயே இதைப் புரட்சிகரக் கருத்தாக்கம் என்று அங்கீகரிக்கிறோம். ஏற்றுக் கொள்கிறோம். அதன் வழி செயல்பட முனைகிறோம்.

18. மாநில சுயாட்சி சார்ந்து முன் வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு தன்னுரிமையில் இடம் உண்டா?

பெரும்பாலும் உண்டு. காரணம் எந்த ஒரு புரட்சிகர எடுத்த எடுப்பிலேயே நடவடிக்கையும் அப்படியே பாய்ந்து முன்னேறி விடுவதில்லை.

இது பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் பரந்து பட்ட மக்களின் விழிப்புணர்வு அவர்களின் உணர்வு பூர்வ மான ஒன்றிப்பு இவற்றின் ஊடேதான் சாத்தியமாகிறது. சாத்தியமாகவும் முடியும்.

எனவே புரட்சிகரக் கோட்பாடுகள் எதுவும் சீர்திருத்த நடவடிக்கைகளை முற்றாக புறக்கணித்து விடுவதில்லை. முடியாது.

இந்த அடிப்படையில் தன்னுரிமைக் கோரிக்கையுள் மாநில சுயாட்சிக் கோரிக்கைகள் சிலவும் அடங்கும்.

ஆனால் இந்த உறவைப் புரிந்து கொள்ளாமலோ, அல்லது வேண்டுமென்றோ சிலர், மாநில சுயாட்சிக் கோரிக்கைகளை தன்னுரிமைக்கு எதிரானதாகவே அல்லது இதற்கு மாற்றானதாகவோ நிறுவ முற்பட்டு வருகிறார்கள்.

19. ஆக புரட்சிகர நடவடிக்கைகளுக்கு சீர்திருத்தங்கள் தேவைப்படுகிறது இல்லையா?

நிச்சயமாக. ஆனால் சீர்திருத்த நடவடிக்கைகளோடு மட்டுமே ஒரு செயல் நின்று விடுமானால், அதனால்

www.tamilarangam.net



அடிப்படை மாற்றத்தை நிகழ்த்த முடியாது. ஆகவே, இந்நடவடிக்கைகள் சீர்திருத்த மட்டத்திலேயே நின்று புரட்சிகர மாற்றத்தை அடைய முடிவதில்லை.

புரட்சிகர நடவடிக்கைகள் இடையில் சில சீர்திருத்த நடவடிக்கைகளையும் எதிர் கொள்ளலாம். ஆனால் இது அச்சீர்திருத்தங்களோடு நின்று விடாமல் அடுத்த கட்டத்திற்கு, புரட்சிகர மாற்றத்திற்கும் வழி கோலுவதாக இருக்கும்.

எனவே முழக்கங்களை முன் வைக்கும் போது எது சீர்திருத்த முழக்கம் எது புரட்சிகர முழக்கம் எனப் புரிந்து, புரட்சிகர முழக்கத்தை முன்னிருத்தி அதைக் கைவிடாமலும் இடையில் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் கிடைக்கும் பலன்களை பெறும்மாற்றங்களை, புரட்சிகர முழக்கங்களையும் நடவடிக்கைகளையும் நோக்கிக் கொண்டு செல்லும் வகையிலும் நாம் செயல்பட வேண்டுவது அவசியம்.

20. இதன்படி மாநில சுயாட்சிக் கோரிக்கைகளை தன்னுரிமை நோக்கி முன் கொண்டு செல்ல வேண்டும் என்கிறீர்களா?

ஆம் முழக்கங்களைத் தேர்ந்தெடுக்கும்போதே அவை புரட்சிகர முழங்கங்களாகவும் புரட்சிகரச் செயல்பாடுகளுக்கு இட்டுச் செல்வதாகவும் அமைய பார்த்துக் கொள்ள வேண்டும் என்கிற நோக்கில் இடையில் எழும் சீர்திருத்த நடவடிக்கைகளை இப்புரட்சிகர முழக்கங்கள் உள்வாக்கிக் கொண்டு செல்லும். அது புரட்சியின் இலக்கை நோக்கிய பயணத்துக்கு துணையாக அமையும்.

www.tamilarangam.net



இந்த அடிப்படையிலேயே மாநில சுயாட்சிக் கோரிக்கைகளையும் தன்னுரிமைக் கோரிக்கைகளையும் புரிந்து கொள்ளவேண்டும்.

மாநில சுயாட்சிக் கோரிக்கைகள் தன்னுரிமையுள் அடங்கும். ஆனால் தன்னுரிமைக் கோரிக்கைகள் மாநில சுயாட்சிக்குள் அடங்காது. இவ்விரண்டிற்குமுள்ள ஒற்றுமையும் இதுதான். அடிப்படையான வேற்றுமையும் இதுதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியரின் பிற நூல்கள்

1. பறிமுதல் (சிறுகதைத் தொகுப்பு)
2. எட்டுகதைகள் ( ,, ,, )
3. தற்செயல் ( ,, ,, )
4. 21வது அம்சம் (நெடுங்கதை)
5. சிறகுகள் முளைத்து (நவீனம்)
6. தெனாலிராமன்
   நகைச்சுவை நாடகங்கள் (நாடகம்)
7. மரியாதைராமன்
   மதிநுட்ப நாடகங்கள் (நாடகம்)
8. வட்டங்கள் ( ,, )
9. நாளை வரும் வெள்ளம் ( ,, )
10. கடவுள் என்பது என்ன?
    (தத்துவ அறிமுக நூல்)
11. அணுசக்தி மர்மம்
    (தெரிந்ததும் தெரியாததும்)
    (அறிவியல் ஆய்வு நூல்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# படியுங்கள்

# தமிழர் கண்ணோட்டம்

★ தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை தந்து தமிழ்த்தேச வரலாற்றில் புதுயுகம் படைத்திட

★ தீண்டாமையை வேரறுத்து சாதிமதத் தடை நீக்கி தமிழர் தம் ஒற்றுமையைப் பாதுகாத்திட

★ இந்தித் திணிப்பை எதிர்த்து, ஆங்கில ஆதிக்கம் அகற்றி தாய்த் தமிழின் உரிமையை மீட்டிட

★ தமிழ்நாட்டின் வந்தேறிகளாம் மார்வாரி குசராத்தி சேட்டுகளின் ஆதிக்கத்தை முறியடித்து அவர்களை வெளியேற்றிட,

★ பெண் விடுதலையை முன்னெடுக்க,

தமிழ்த்தேசச் சிந்தனையின் படைக்கலனாய்
வெளிவரும் மாத இதழ்

தனி இதழ் ரூ. 4/-

ஆண்டு சந்தா ரூ. 50/-

வாழ்நாள் சிறப்பு சந்தா ரூ. 500/-

முகவரி

**ஆசிரியர், தமிழர் கண்ணோட்டம்**
53. அ.சமீன்தார் குடியிருப்பு,
புது ஆற்று சாலை,
தஞ்சாவூர்-613001.

EELAM BOOKS SIGNATU... NO...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்